JANAVINODINI.

ஜநவிநோதிநி.

இல. 1, 2.] {ஜனுவரிமீ பேப்ருவரிமீ} 1878. [புஸ்த. IX.

CONTENTS.

Improved Madras Architecture....	1
What is Good Building?....	3
On Trifles	11
The Wonderful Prism	16
Old Deccan Days	24
Counsel to one's Children......	31
The Language of Animals........	37
The Child's Corner	43
News	49

அட்டவணை.

புதுமாதிரிக் கட்டடங்கள்	1
சிற்பசாஸ்திரம்	3
அற்பவிஷயங்கள்	11
பட்டைதீர்ந்த பளிங்கின் அதிசயம்...	16
தக்காணத்துப் பூர்வகதை	24
மக்களுக்குச்செய்த நற்போதனை....	31
ஜீவஜந்துக்களின் பாஷைகள்	37
சிறுவர்க்கான கதை (7)	43
சமாசாரம்	49

.அன்பளிப்பு.திரு.க.சுப்பிரமணிய ஐயரவர்கள்

MADRAS:

Published by the

MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY,

AND SOLD AT THEIR DEPOSITORY, OLD COLLEGE.

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை-600090.

NOTICE.

☞ A new series of interesting Tales from "*Old Deccan Days*" hitherto unknown to the Tamil country is now appearing in Janavinodini.

Also

A "CHILD'S CORNER"

HAS BEEN OPENED

Giving a new tale each month written expressly for Little Folks.

☞ We shall be thankful if our Readers will shew a few Numbers of *Janavinodini* to their relatives and friends in the country. We are anxious to have a larger circulation in the Tamil Districts.

இதுவரையில் நமது நாட்டில் வழங்காத

தக்காணத்துப் பூர்வகதை

என்னும்

விநோதமான புதியகதைகள்

இப்பத்திரிகையின்

பிரதிமாசச் சஞ்சிகையில் சிற்சிலவாய்ப்

பிரசுரஞ்செய்யலாகும்.

இப்படியே

சிறுவர்க்கான கதை

என்று

சில நூதன கதைகள்

மாதம் ஒவ்வொன்றாகப் பிரசுரமாகிவருகின்றன.

☞ இந்த ஜநவிநோதிநியை வாசிக்கும் நாட்டுக்கையொப்பக்காரர்கள் தங்கள் பந்துமித்திரர்களுக்கும் சில ஸஞ்சிகைகளைக் காட்டிப் படிக்கச்செய்யும்படி வேண்டுகிறோம். நாட்டுக்கையொப்பக்காரர் அதிகரிப்பது இந்தப் பத்திரிகையின் பிரயோஜனமாக இருக்கும்.

NOTE BY THE HONORARY EDITOR.

In entering on a new year, we take this opportunity of again acknowledging with pleasure our obligations to the friends and supporters of *Janavinodini*, who help to sustain us in our efforts and aid us in extending its circulation. Our professed aim, as originally set out, is to offer to the Tamil country some elements of popular instruction and healthy amusement, and we believe it is well understood that *Janavinodini*, like the other publications of the Society for which it is conducted, avoids all matters of *political* or *religious* discussion and all controversial topics. We intend to keep to this policy, and shall continue to do our best to increase the popularity which this Magazine now enjoys.

பத்திராதிபர் அறிக்கை.

இப்போது புதுவருஷம் பிறந்து புதுப்புத்தகம் ஆரம்பிக்கின்றபடியால், இப்பத்திரிகையை நடத்துகிறவிஷயத்தில் நமக்கு உபபலமாயிருந்து இச்சஞ்சிகைகள் எங்கும் பரவும்படி உதவிசெய்துவருகின்ற அபிமானிகளிடத்தில் நன்றிபாராட்ட இது நமக்கு ஒரு நல்லசமயம் வாய்த்ததென்று சந்தோஷிக்கின்றோம். நம்முடைய முக்கியமான கருத்தென்னவெனில், இந்த ஜநவிநோதிநியை முதலில் தொடங்கினபோது சொல்லியபடியே, இத்தமிழ் நாட்டார் அனைவர்க்கும் நீதிபோதகமாயும் குற்றமற்ற விநோதத்தை விளைவிப்பதாயுமிருக்கின்ற நாநாவிஷயங்களையும் இனியகதைகளையுமே எடுத்து வெளியிடவேண்டுமென்பதே. நமது சபையார் பிரசித்தப்படுத்தியிருக்கிற மற்றப் புத்தகங்களைப்போலவே இந்த ஜநவிநோதிநியிலும் துரைத்தன விஷயம், மதக்கோட்பாடு, வீண்விவாதம் இவற்றை யாம் விலக்கியிருக்கிறோமென்பது யாவர்க்குந் தெரிந்தவிஷயந்தான். இந்த ஏற்பாட்டையே நாம் கடைப்பிடித்து, இந்த ஜநவிநோதிநியை அதன்பெயர்ப்பொருளின்படியே மிகவும் இனிப்புடையதாகச்செய்து, இதற்கு இப்போது வாய்த்திருக்கின்ற நாட்டார் நன்குமதிப்பை மேன்மேலும் விருத்திசெய்ய நம்மால் கூடியவரை முயன்றுவருவோம்.



IMPROVED MADRAS ARCHITECTURE.
புதுமாதிரிக் கட்டடம்.

ஜநவிநோதிநி.

இல. 1, 2.] {ஜனுவரிமீ பேப்ருவரிமீ} 1878. [புஸ்த. IX.

புதுமாதிரி கட்டடங்கள்.

இச்சென்னைமாநகரிலுள்ள பல சாலைகளுள்ளும் மிகவும் பிரசித்தமான மலைச்சாலையில், பலவிதமான பொன்வெள்ளி பாத்திரங்களும், பூஷணங்களும், சுலோசனமுதலான பலவகைக் கண்ணடிக்கருவிகளும், இவைபோன்ற வேலைத்திறமுள்ள இன்னும் அநேக சாமான்களும் வைத்து விற்பனைசெய்வதற்காக, ஆர் அன்டு கம்பேனி என்னும் சங்கத்தார் சிறந்தமாளிகையொன்று அமைத்திருப்பது இந்நகரவாசிகள் அநேகருக்குத் தெரிந்திருக்கலாம். அது, அதிக வெப்பமான இத்தேசத்தில் குடியிருப்பதற்கு ஏற்றதாய்க் கட்டடமமைப்பதற்கு, ஒரு நல்லமாதிரியாயிருக்கிறது. மேலும் அது யாவர்க்கும் பார்க்க இனிப்பாயும், வீடுகட்டுகிறவர்களுக்கு நல்ல யுக்திகளும் ஆலோசனைகளும் உண்டாக்குவதாயுமிருக்கின்றது. அம்மாதிரி கட்டடம் ஏற்படுத்தினதற்குக் காரணம் என்னவெனில், அதேவிதமாய் விசாலமாயும், நடுவே கம்பம்முதலிய தடையில்லாமல் ஒரே சமமாயும் கூடமமைத்து, நீரொழுக்கு உண்டாகாமல் உறுதியாய் மேல்தளம்போட்டு, பார்வைக்கு லேசாகவும் இந்த உஷ்ணதேசத்துக்கு ஏற்ற குளிர்ச்சியுடையதாகவும் மாளிகைகள் ஏற்படுத்தவேண்டுமென்பதேயாம். கட்டடம் கட்டவேண்டிய விதத்தை முதலில் சித்திரித்து அதேவிதமாய் இந்த மாளிகையைக் கட்டுவித்த சிற்பசாஸ்திரபண்டிதரான மேஸ்தர் சிஸிம்துனை, நீரொழுகவொட்டாமல் திடமாய் மேற்கூரை வேய்வதற்கு, இத்தாலியா தேசத்துத் துத்திநாகத்தகடும் புதிதாய் ஏற்பட்டிருக்கும் அட்டத் தாழ்ப்பாளுமே மிகவும் ஏற்றவையாயிருக்கின்றனவென்று தெரிந்

தெடுத்தார். சாதாரணமான துத்திநாகத்தகட்டை உபயோகித்தால், அது மாரிகோடைகாலங்களில் சுருங்கியும் விரிந்தும்போவதனுல் பூட்டுதளர்ந்து, சந்துகொடுக்கின்றது. புதிதாய் ஏற்பட்டிருக்கும் அட்டத்தாழ்ப்பாளை உபயோகித்தால், அந்தத் தாழ்ப்பாளின் ஒரு பாகம் மானடிச்சுவடு அல்லது பெரியரந்திரங்களின்மேல் பொருந்திநின்று அந்தப் பூட்டுக்கு யாதொரு ஊனமும் உண்டாகாதபடி காக்கின்றது.

நெட்டாங்குவைத்த உத்திரங்கள் நாட்டுவதனுல் மேற்புறம் பார்வைக்கு வெகு லேசாயும் அழகாயும் தோன்றி உள்ளே விசேஷமாய் நல்லகாற்று வந்தடைவதற்கும் இடமுண்டாகின்றது. மேல்மச்சினின்றும் போதுமான வெளிச்சம் உண்டாகும்படி அங்கே இழைத்த கனமுள்ள தட்டைக்கண்ணுடிகள் 42 புதைத்து அதன்வழியாய் உஷ்ணம் உள்ளே இறங்காதபடி மறைவாகத் திரைச்சீலைகளும் கட்டப்பட்டிருக்கின்றன. இச்சீலைகளைக் கீழிருந்தே கப்பிக்கயிறுகளால் விரிக்கவும் சுருட்டவும் கூடும்.

அந்த மாளிகையில் உட்செல்லவும் வெளிவரவு மேற்பட்டிருக்கும் துவாரங்களின் வழியாய்த் தூசுகள் வந்தடையாதபடி அகன்ற தாழ்வாரமொன்று சுற்றிலும் அமைக்கப்பட்டிருக்கிறது. அது மெல்லிய தண்டவாளக்கம்பங்களும் இருப்புவேலைப்பாடும் வர்ணவேலைப்பாடும் நிறைந்து விளங்குகின்றது. உயர்ந்த நூக்கமரக்கதவுகள், தட்டைக்கண்ணுடி ஜன்னல்கள், மெருகிட்ட சதுரக்கற்கள் இவைபோன்ற சிறந்த சாமான்கள் இந்த மாளிகையில் அங்கங்கே உசிதமாய் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. பகற்காலத்தில் சுவர்களுக்குள் மடக்கிவைக்கவும் இராக்காலத்தில் வழியை மூடிவைக்கவும் ஏற்றதாய், மாறுசாவிபோட்டுத் திறக்கக்கூடாததாய், தாள் பூட்டு முதலியவை ஒன்றுமில்லாத சுழல்கதவுகள் தெருப்புறத்தில் நாட்டப்பட்டிருக்கின்றன.

இந்த மாளிகையின் மாதிரி முதலில் மேஸ்தர் சிஸிம் துரையால் ஒரு பலகையில் வரையப்பட்டு லண்டன்நகரத்துத் தச்சுவேலைக்காரரான மேஸ்தர் வாலஸ்லே அவர்களால் செதுக்கப்பட்டது. இந்த உஷ்ணதேசத்துக்கு ஏற்றப்படி செம்மையாய்க் கட்டடம் அமைக்கத்தெரியாத பலருக்கு மேல்வரிச்சட்டம்போல் உபயோகமாயிருக்குமென்று கருதி அந்த மாளிகையின் உருவம் இந்தச் சஞ்சிகையுடன் சேர்த்தனுப்பலாயிற்று.

மிகவும் அழகாயிருந்தாலும், அது எப்படி வந்ததென்பதைக் கருத்தாய் ஊன்றிப்பார்க்கத்தக்க விசேஷம் அவற்றுள் ஒன்றுமில்லையென்று நாம் சும்மாவிருந்துவிடுகிறோம். இப்படி நினைப்பது தான் மேற்பார்வையென்று சொல்லப்படுவது. நமக்கு வாஸஸ்தானமாய் ஏற்படுத்தப்பட்ட அற்புதமான இப்பூமண்டலத்தில் எங்கும் அடர்ந்திருக்கிற சிருஷ்டிப்பொருள்களோடு நாம் பழகுகிற வழி இதுவன்று. இப்படி இவ்வுலகத்திலுள்ள பொருள்களை மேற்பார்வையாய்ப் பார்ப்பதனாலேயே யாவரும் திருப்தியடைந்துபோவார்களானால், சகல வித்தைகளும் சாஸ்திரங்களும் மேன்மேலும் அபிவிருத்தியாகி நாகரிகம் அதிகரிப்பது அடியோடு அழிந்துபோகாவிட்டாலும், வெகு தாமதத்திலாகுமென்பதற்குச் சந்தேகமேயில்லை; ஆயினும் உண்மையைப்பார்த்தால் அப்படியிருக்கவில்லை. மிகுந்த யுத்தியும் புத்தியும் உடையவர்களாய்த் தெய்வப்பிறப்பென்று சொல்லத்தக்க சில சாஸ்திரபண்டிதர்கள் அப்பப்போது இப்பூமியில் வந்து பிறந்து இப்படிப்பட்ட விஷயங்களோடு நுட்பமாய்ப் போராடி அவைகளை ஆராய்ச்சிசெய்வதிலேயே தங்கள் காலத்தைக் கழித்திருக்கிறார்கள்.

அவர்களுள், ஸர் ஈஸாக் நியூடன் என்பவர் ஒருவர். அவர் சுமார் இரண்டு நூற்றாண்டுகளுக்குமுன்னே, தம் கையினாலேயே ஏற்படுத்திய சில முரட்டுக்கருவிகளைக்கொண்டு மேலேசொல்லிய பிரிஸ்ம் என்னும் கண்ணாடித்துண்டில் தோன்றும் வர்ணங்களின் விதத்தைப்பற்றி ஆராய்ச்சிசெய்தார். அவர் 1672-ஆண்டில் ராஜசபைக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதிற்கண்ட விஷயத்தை எடுத்துக்காட்டுவதே அவருடைய யோக்கியதையைத் தெரிவிக்கப் போதுமானது. அதாவது: பலவித வர்ணங்களின் மகிமையைப் பரிசோதிக்கவேண்டுமென்று முச்சதுரமான பளிங்குத்துண்டொன்று சம்பாதித்தேன்; சம்பாதித்து அதன் வரலாற்றைப் பரிசோதிப்பதற்காக, போதுமான வெளிச்சம் உள்ளே வரும்படி, என் அறையின் சாளரக்கதவில் துவாரமொன்றுசெய்து அதில் அந்தப் பளிங்குத் துண்டைவைத்துச் சூரியகாந்தி அதிற்பட்டு பிரதிபலிக்கும்படி செய்துபார்த்தேன்; அப்போது தோன்றின அதிசயத்தைப்பார்த்து எனக்கு உண்டான வியப்பு இவ்வளவு அவ்வளவன்று; ஒளி அந்தக் கண்ணாடித்துண்டின் மூலமாய்ப் பாய்ந்து எதிர்ச்சுவரில் வட்டவடிவமாய்ப் பரவுவதைவிட்டு, இந்திரதனுசுபோலே பல விசித்திரமான வர்ணத்தோடு கொடிகொடியாய்ப் பரந்தது. ஒரு கோடியில் சிவப்புநிறமும், அதன்பின் மஞ்சள் பசுமை நீலம் ஊதா இந்த நிறங்களும் வரிசையாய்ப் பாய்ந்தது என்று எழுதியனுப்பினார். அந்தச் சோதனையினால் ஸ்தாபிக்கப்பட்ட வர்ணங்களின் அதிசயந்தான் சிற்சில மாறுபாடுகளோடு இன்னும் ஆக்ஷேபமில்லாமல் இருந்துகொண்டிருக்கிறது.

இதைப் பிற்காலத்தில் அநேக சாஸ்திரிகள் பரிசோதித்துப்பார்த்ததுமன்றியில், இந்த நூற்றுண்டுக்குமுன்னே டாக்டர் வாலேஸ்டன் என்பவர் சோதனைசெய்துபார்த்து அதில் இன்னும் சில புதுமைகள் இருப்பதாகக் கண்டறிந்தார். நியூடன் செய்த ஒரு சிறு துவாரத்திற்குப் பதிலாகத் தன் அறைச்சாளரக்கதவில் சிறுபிளவு ஒன்று செய்து சோதனைபார்த்து, அந்தப் பிரதிபலனத்தில் ஒவ்வொரு வர்ணக்கொடிகளின் மத்தியிலும் ஒவ்வொரு இருண்டவரி ஓடியிருக்கிறதென்று கண்டார். இதைக் கண்டுபிடித்தது அப்போது ஒரு அதிசயமாய்த் தோன்றுமற்போனாலும் பிறகு அநேக சோதனைக்காரர்கள் மேன்மேலும் பரீக்ஷைசெய்துபார்ப்பதற்கு இடமாயிற்று. இருண்டகோடு ஒன்று நடுவே தோன்றுவதற்கு வழி என்னவென்று அதன் விவரத்தைக் கண்டறியப் பலபேர் பலவிதமாயப் பிரயத்தனப்பட்டார்கள். அதைக் கண்டறிய ஒருவராலும் ஆகாமற்போயிற்று. முதலில் மியூனிச் நகரத்திலிருந்த நயனசாஸ்திரபண்டிதர் ஒருவர்: அந்த நிறம் ஒருபோதும் மாறுவதில்லை; ஒவ்வொரு கிரணத்திற்கும் அந்தப் பிரதிபலனத்தில் நிலையாய் ஒவ்வொரு இடமுண்டு என்று சொல்லி, அந்தச் சாயையில் சுமார் அறுநூறுவரையில் வர்ணக்கோடுகள் இருக்கின்றனவென்று அவைகளை எழுதியும் காட்டினர். பின்பு அந்தக் கோடுகளுக்கு அவர்பேரே பேராயிற்று.

இந்த விஷயத்தைப் பரிசோதிப்பதற்குவேண்டிய கருவிகள் நன்றாய்த் திருத்தப்பட்டபிறகு 1830-ஹுத்தில் அந்த வர்ணக்கோடுகள் நூறுக்கணக்காயிருப்பதைவிட்டு ஆயிரக்கணக்காய் இருக்கின்றனவென்று கண்டறியப்பட்டன. ஆயினும் அதன் விவரம்மாத்திரம் ஒருவர்க்குந் தெரியாமல் இன்னும் தடுமாற்றமாயே இருக்கின்றது. இவ்வளவுகாலத்தில் நியூடன் தன் இருட்டறையில் கண்டுபிடித்தவிஷயம் அதிகமாக விருத்திசெய்யப்பட்டது. பிரிஸ்ம் என்னும் பளிங்கை ஒரு குழாயில்வைத்து அதனுள் கொஞ்சம் ஒளிபடும்படியாக ஒருபுறத்தில் சிறிய துவாரமொன்று செய்து மற்றொருபுறத்தால் அதன் சாயையிலுள்ள அதிசயத்தைப் பார்க்கும்படியாக யந்திரமொன்றுசெய்யப்பட்டது. இப்போது பிரதிபிம்பதரிசினி (spectroscope) என்று வழங்குகிற கருவிக்கு முதல் உருவமாகிய இது, பலவர்ணங்களின் வேற்றுமையைக் கண்டறியும்பொருட்டு முதலில் நியூடன் ஏற்படுத்திய ஏற்பாட்டினின்றுந் தேர்ந்தறியப்பட்டதேயொழிய வேறல்ல.

இன்னும் சில வருஷங்களுக்குமுன்னே ஹேர்ஷல் என்பவர் ஒருவர் சில சோதனைகள் செய்திருக்கிறார். பிரதிபிம்பதரிசினி என்னும் கருவி ஏற்படுத்துவதற்காகவே செய்யப்பட்ட அந்தப் பரீக்ஷையானது, கீழ்ச்சொன்ன இருண்டகோடுகளின் மூலத்தைக் கண்டறிவதற்காகப் பிறர்க்கு மிகவும் ஆதாரவாயிற்று. அவர், தீயில் லோஹங்களைவைத்து ஊதி எரியச்செய்தால், அவை பலவித வர்

ணங்களைக் காட்டுகின்றனவென்பதை எடுத்துக்காட்டி, பின்னும் இந்த வர்ணங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு லோஹத்துக்கு உரித்தாயிருப்பதனால், இதைக்கொண்டு இவ்வர்ணங்களை நாம் பகுத்தறிவதற்கு நல்லதாய்ப் புதுவழியொன்று கண்டுபிடிக்கக்கூடுமென்று சொல்லியிருக்கிறார். இதற்குத் திருஷ்டாந்தமாய், நாடகசாலைகளில் பண்டிகைமுதலான விசேஷகாலத்துக்குக் குறிப்பாகக் குங்கிலியம் முதலிய சில லோஹப்பொடிகளைத் தீயில் இறைத்து மிகவும் பளபளப்பாய்ச் சிவப்புநிறம் பச்சைநிறம் இவைகளைக் காட்ட நாம் கண்டிருக்கிறோமல்லவா? பாணவித்தை செய்கிறவர்கள் தங்கள் பாணங்களில் பலவிதவர்ணங்களைக் காட்டுகிறார்களே; அந்த வர்ணங்களெல்லாம் அந்தந்த லோஹங்களின் சேர்க்கையால் உண்டானவைதாம். பிற்காலத்தில் அநேகர் லோஹங்களை நன்றாய்க் காய்ச்சி அவற்றின் நிறத்தைப் பரீட்சித்தார்கள். அது பிரதிபிம்பதரிசினியால் அந்த நிறங்களைப்பார்க்க அநேகர்க்கு ஒத்தாசையாயிற்று. பலர் அதைப் பரிசோதித்துப்பார்த்து, லோஹங்கள் ஜ்வலித்துக்கொண்டிருக்கும்போது பிரிஸ்ம் என்னும் பளிங்கினால் பார்த்தால், அவைகளுள் பளபளப்பான சில கோடுகள் தெளிவாய்த் தெரிகின்றனவென்று கண்டார்கள். மேலும் அந்தப் பளபளத்த கோடுகளின் நடுவே, முன் சூரியகாந்தியில் காணப்பட்டதுபோல் ஒவ்வொரு கறுப்புவரியும் இருக்கிறதென்று கண்டார்கள். கடைசியில், இவ்விருவகைக் கோடுகளுக்கும் நுட்பமான சம்பந்தம் உண்டென்பது நன்றாய்க் காணப்பட்டது. நெடுநாளாய் ஒருவர்க்குந் தெரியாமலிருந்த இந்தச் சங்கதி பிடிபட்டுப்போகவே இதைக்கொண்டு அநேகம் சோதனைகள் உற்சாகத்துடன் செய்யப்பட்டன. கடைசியில் எரிகிற லோஹத்தை மின்னொளியின் மூலமாய்ப் பரிசோதனைசெய்துபார்த்து முன் பிரகாசமாய்த் தெரிந்த கிரணங்களெல்லாம் கறுத்திருப்பதாய் அறிந்துகொண்டார்கள்.

அதற்குத் திருஷ்டாந்தம் ஒன்று பாருங்கள். நன்றாய் ஜ்வலிக்கிற தணலில் கொஞ்சம் வெடியுப்பை எடுத்துப்போட்டு அதனால் உண்டாகும் ஜ்வாலையை பிரதிபிம்பதரிசினியால் பார்த்தால், இரண்டு கோடியிலும் இரண்டுகோடுதவிர மற்றவையெல்லாம் கறுப்புக்கோடாகவேயிருக்கின்றன. அந்த நிறம் பொடாஸியம் என்னும் ஒருவகைப் பொருளுக்கே உரியது. இதை நாம் தெரிந்துகொண்டால அந்த லோஹம் இன்னதென்று தெரியாமலிருந்தாலும், பிரதிபிம்பதரிசினியைக்கொண்டு அது எரிகிற ஜ்வாலையைப்பார்த்து அந்த ஜ்வாலைக்கு மூலம் இன்னதென்பதை எளிதில் தெரிந்துகொள்ளக்கூடுமல்லவா? இவ்விதமாகச் செய்த பல பரிசோதனைகளால் ஆகாயத்திலுள்ள அநேகங் கிரகங்களின் உண்மை நன்றாய் கண்டறியும்படியாயிற்று.

பிரதிபிம்பதரிசினியால் வானத்திலுள்ள கிரகங்களைச் சோதித்துப்பார்த்தது, முன்னிருந்த பல சிறந்த சோதிஷசாஸ்திரிகள்

கண்டறிந்த விஷயங்களை வெகு நன்ருய் உறுதிப்படுத்திற்று என்பதுமாத்திரமேயல்ல; சில கொள்கைகள் மாறவும், புதிதாய்ச் சில கொள்கைகளுண்டாகவும் ஏதுவாயிற்று. சூரியனுடைய வடிவத்தைச் சுற்றிச் சுமார் பதிஞயிரங்காததூரத்தில், கொஞ்சம் பிரகாசமுள்ள மண்டலமொன்று கவர்ந்துகொண்டிருக்கிறதென்பது, சூரியனொளியானது கிரணம் முதலியவைகளால் அதிகமாய்ப் பிரகாசியாமல் மறைந்திருக்கிறகாலத்தில் தெளிவாய்க் காணப்பட்டது. அந்த மண்டலத்திற்குள் ஹைட்ரஜன் என்று சொல்லப்பட்ட ஒருவித ஜலவாயு கடல்போல் பரவியிருக்கிறதென்றும், அதில் ஒவ்வொருகாலத்தில் மாக்னீஷியம் என்று சொல்லப்பட்ட ஒருவகை எரிகந்தகம் விசேஷமாய் எரிந்துகொண்டுவந்து கலக்கிறதென்றும் முன்சொல்லிய பளிங்குத் துண்டிஞல் பார்த்தறியப்பட்டது. லோஹங்களுக்கு இப்படிப்பட்ட இயற்கையுண்டென்பதை முதலில் பதார்த்தகுண பரீக்ஷாசாலையில் கையிஞற்செய்து சோதித்துப்பார்த்து, அதைக் கொண்டு இவையெல்லாம் நிச்சயித்தறியப்பட்டனவேயொழிய வேறல்ல. பிரதிபிம்பதரிசினியால் பார்க்கும்போது சூரியன் நன்ருய்ப் பிரகாசிக்கிறகாலத்திலும் ஒருவிதமான கிரணரேகைகள் தெரிவதஞல் சூரியனைச் சுற்றிப் பெரியமண்டலம் ஒன்று உண்டு என்பது தெளிவாய் விளங்கும்.

இவ்விஷயத்தைத் தெரிந்துகொண்டதஞல், முன் சுக்கிரகிரணம் நேர்ந்தபோது, சூரியபிம்பத்தில் பிரவேசிப்பதற்கு முன்னும் பின்னும், சுக்கிரனுடைய நிலையை நன்ருய்க் கண்டறிவதற்கு இடமுண்டாயிற்று. எப்படியெனில், தனக்காய் ஒளியில்லாத மந்தக்கிரகங்கள் சூரியமண்டலத்தினருகே செல்லுமாஞல், அவை தாம் போகிறவழியில் சூரியகிரணத்தைத் தெரியவொட்டாமல் மறைக்குமென்பது நன்ருய்த் தெரிந்தவிஷயமே. ஆகையால் அந்தக்கிரகம் கண்ணுக்குத் தெரியாமற்போனுலும் அது இருக்குமிடம் நன்ருய்த் தெரிந்துகொள்ளத்தக்கதாகின்றது. சூரியமண்டலத்தில் தோன்றுகிற கிரணங்களைப் பதார்த்தகுண பரீக்ஷாசாலையில் காணப்படுகிற பல வர்ணரேகைகளோடு ஒத்துப்பார்த்ததில், பலவர்ணங்களோடு எரிகிற சூரியனுடைய பிம்பத்தில் பதின்மூன்றுவிதத்திற்குக் குறையாமல் லோஹங்கள் கலக்கப்பட்டிருக்கவேண்டுவது அவசியமென்று ஊஹித்திருக்கிருர்கள். இந்தப் பூமி தத்துவத்திலுள்ள சில தோற்றங்களால் நமக்கு வாசமாயிருக்கிற இந்தப் பூமியும் ஏதோ ஒருகாலத்தில் அக்கினிபோல் எரிந்துகொண்டிருந்திருக்கவேண்டுமென்றும் இப்பூகோளத்தைச் சுற்றிக்கொண்டிருக்கிற வாயுமண்டலம், இப்போது மிகவும் சாந்தமாயிருந்தாலும், முன்னொருகாலத்தில் சூரியனைச் சுற்றியிருக்கிற வாயுமண்டலம்போலவே, பலவிதப் பொருள்களின் சேர்க்கையுடையதாய் மிகவும் உக்கிரமாயிருந்திருக்குமென்றும் ஊஹிக்கப்படு

கிறது. அப்படியே நமது மூச்சுக்கு ஆதாரமாயிருக்கிற வாயுவிலும் சில வர்ணரேகை தோன்றுகின்றன. சூரியன் அடிவானத்திலிருக்கும்போதுதான் அவை விசேஷமாய்க் காணப்படுகின்றன; அதாவது சூரியனுக்கும் நமக்கும் மத்தியில் வாயுமண்டலம் கனத்திருந்தால் நன்ருய்க் காணப்படுகின்றன. நீலம் பச்சை இந்தக் கிரணங்கள் கொஞ்சந் தூரத்திலேயே மறைந்துபோகின்றன. செவப்புகிரணங்கள்மாத்திரம் யாதொரு தடையுமில்லாமல் காலையிலும் மாலையிலும் சூரியனை ரத்தம்போல மிகவும் செம்மையாய்க் காட்டிக்கொண்டு ஆகாயம் கனத்திருந்தாலும் அதன்வழியாய் நுழைந்துவந்து பிரகாசிக்கின்றன. மேலும் பிரதிபிம்பதரிசினி என்கிற கருவியால், அந்தந்தக் கிரகங்களைச் சூழ்ந்திருக்கும் வாயுமண்டலத்தின் இயற்கை இப்படிப்பட்டதென்று நன்ருய்க் காணப்படுகிறது. இப்படி எவ்வளவு சிறந்தவிஷயங்களெல்லாம் புதிதுபுதிதாய்த் தென்படுகின்றன பாருங்கள்! அந்தந்தக் கிரகங்களிலுள்ள வாயுமண்டலத்தின் தன்மையைப்பார்த்தால், அங்கங்கே இப்பூமியிலிருப்பதுபோலவே ஆறுகளும் ஏரிகளும் கடல்களும் இருக்கின்றனவென்றும், அவையெல்லாம் இப்பூமியிலுள்ள ஜலாசயங்கள்போலவே, வெயிலால் நீர்வற்றி ஆவியாக மாறிக்கொண்டிருக்கின்றனவென்றும் தெரியவருகின்றன. அந்த உலகங்களில் வாழ்பவர் எப்படிப்பட்டவர்களோ? சந்திரனைப்பார்த்தால் அங்கே மாத்திரம் வாயுமண்டலமொன்று இருப்பதாகத் தெரியவில்லை; அங்கே பிராணிகள் வாஸம்பண்ணுவதாயிருந்தால், காற்றும் நீரும் இல்லாமலேதான் வாழவேண்டும். சந்திரகிரணங்களும் மற்றக் கிரகங்களின் கிரணங்களும் அளவிலும் வர்ணத்திலும் சூரியகிரணத்தோடு ஒத்திருப்பதனுல், எல்லாக் கிரகங்களுக்கும் சூரியனுலேதான் ஒளியுண்டாகிறதென்பது உறுதிப்படுகின்றது.

லோஹங்களின் சேர்க்கையால் ஒளியுண்டாகின்றதென்று நாம் குறித்திருக்கிறபடியே, ஆகாயத்தில் நிலையாயிருக்கிற கோடா கோடி நக்ஷத்திரங்களிலும் தோன்றுகிற ஒளி, சிருஷ்டியிலேயே அப்படிப்பட்ட சேர்க்கையினுல் உண்டாயிருக்கலாம். சாயாதரிசினியும் அதை அப்படியே ஸ்தாபிக்கின்றது. அந்த நக்ஷத்திரங்களெல்லாம் நம்மால் அளவிடக்கூடாத தூரத்திலிருப்பதாலும், இப்படிப்பட்டவையென்று ஒருவகையிலும் நமது புத்திக்கு விஷயமாகாமலிருப்பதாலும், அப்படிப்பட்ட நக்ஷத்திரங்களின் இயற்கையைக்கூட உள்ளபடி கண்டுபிடிப்பதென்ருல் அப்போது சாஸ்திரப்பயிற்சி எவ்வளவுதூரம் விருத்தியடைந்திருக்கிறதென்று சொல்லவேண்டும்!

வெகுதூரத்திலுள்ள நக்ஷத்திரங்களின் உருவங்கள் இப்படிப்பட்டவையென்று அவைகளைப் பகுத்தறிந்த புத்தியின் திறமையைக் கண்டு நாம் அதிசயப்படுவதிருக்கட்டும். அவைகளின் நிழலைக்

கொண்டு அவற்றின் உருவத்தை அப்படியே பிரதிமையாய்ப் பிடிக்கலாமென்று கண்டறிந்தால், அந்தப் புத்தியின் சாதுரியத்தை நாம் என்னவென்று சொல்லலாம். கொஞ்சநாளைக்குமுன்னே மிகவும் நுட்பமான ஒருவகை யந்திரத்தைக்கொண்டு அவற்றின் பிரதிமைகள் உருவேற்படுத்தப்பட்டன. அவை நமது கண்ணுக்குத் தெரியாமலே ஓடிக்கொண்டிருப்பதைப்பற்றி அந்தப் பிரதிமையை நிலையாய் ஏற்படுத்துவது வெகு கடினமாயிருந்து; இப்போதுதான் அதற்கு வழிகண்டுபிடிக்கப்பட்டது. இப்படியாக ஒரு பொருளின் சாயையைக்கொண்டு போட்டக்கிராப் என்கிற கருவியால் உருவமேற்படுத்துவது வரவர மிகவும் உபயோகமாய் முடியும்; நன்றாய்க் கைதேர்ந்த சித்திரக்காரனாலேகூட முடிக்கக்கூடாத எவ்வளவு திருத்தமான உருவங்கள் இதனால் ஏற்படுகின்றன! ஆனால் இவ்வளவு தூரங் கண்டுபிடித்தது பிரதிபிம்பதரிசினிக் கண்ணாடியொன்றினாலேயேயல்ல; தூரதிர்ஷ்டிக்கண்ணாடியையும் துணையாய்க்கொண்டே காணப்பட்டது; இல்லாவிட்டால் வெகு தூரத்துக்கப்பால் மினுக்கு மினுக்கென்று தோன்றிக்கொண்டிருக்கிற நக்ஷத்திரங்களின் கிரணங்களெல்லாம் எப்படி நமது கண்ணுக்கு நன்றாய்க் காணப்படும்!

ஆகாயத்தில் சன்னமான மப்பு படர்ந்ததுபோல ஒருவகைப் பொருள்கள் குப்பல்குப்பலாய்த் தோன்றுகின்றனவே; அவை நக்ஷத்திரங்களென்று தூரதிர்ஷ்டிக் கண்ணாடியினால் தீர்மானிக்கப்பட்டிருந்தன. இப்போ பிரதிபிம்பத்தால் பார்க்கும்போது, வாயுமண்டலத்தில் தங்கியிருக்கும் பளபளப்பான ஒருவகைப் பொருளென்று கண்டுபிடிக்கப்பட்டன. அவையெல்லாம் நன்றாய்ப் படைத்து முடிவுபெறாத உலகங்களின் அடிப்படையாக இருக்கலாம். தூமகேது, வால்நக்ஷத்திரமென்றுசொல்லி ஒவ்வொருகாலத்தில் ஒவ்வொரு விநோதப்பொருள்கள் ஆகாயத்தில் காணப்படுகின்றனவே, அவைகூட இத்தன்மையானவைதாம். ஆயினும் அவைகளின் ஒளி இயற்கையானதோ, சூரியனொளியால் வந்ததோ அதுமாத்திரம் சந்தேகமாயே இருக்கிறது. பலவாறு சொல்லியென்ன? பாராமீடர் என்னும் காலஅளவைக் காட்டுகிற கருவியாலேகூடக் காலவளவு சரியாய்த் தெரியாமலிருந்தபோது சாயாதரிசினியால் அதைச் சரியாய்க் கண்டுபிடித்ததாக அநேகம் சாஸ்திரிகள் சொல்லியிருப்பதால, எப்போதாவது ஒருகாலத்தில் அந்தக் காலமானிக்குப் பதிலாகக்கூட இதுவே ஸ்தாபிதமாகுமென்றுந் தோன்றுகிறது.

சாயாதரிசினி லோஹங்களைச் சரியாய் ஒத்துப்பார்ப்பதற்கு மிக்க உபயோகமாயிருக்கிறதென்று ஒருவாறு காட்டினோம். அதின் வல்லமை இவ்வளவுமாத்திரமேயல்ல; அந்தந்த சாயையில் தெரிகிற பலவிதமான கிரணங்களின் பேதங்களையும், ஒவ்வொரு சேர்க்கைப்பொருளின் பதினாயிரத்திலொருபங்கையுங்கூட இப்படிப்பட்டதென்று நன்றாய்க் கண்டறியும்படி அவ்வளவு நுட்பமாக அந்தக்

கருவி சீர்ப்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும் அந்தக் கருவியால் லோஹங்கள்மாத்திரமே பகுத்தறியப்படுகின்றனவென்பதில்லை; வர்ணமுள்ள பொருள்களெல்லாம் இதனுடைய சோதனைக்கு உட்பட்டவைதாம். அதிநுட்பமான பொருள்கள்கூட, பிரிஸ்ம் என்னும் முப்பட்டைதீர்ந்த பளிங்கோடுகூடிய பூதக்கண்ணுடியால் பார்த்தால், பலவிதமான சாயைகளைக் காட்டுகின்றன. ரத்தம் நீராக உருகிப்போயிருக்கிறகாலத்தில் அதையும் இந்தக் கருவியால் பரிசோதிக்கலாம். இப்படி அநேகம் புதுமைகளைக் காண்பதற்கு இது காரணமாயிருக்கிறது.

முதலில் நியூடன் தன் சோதனைக்குச் சகாயமாய் எடுத்துக்கொண்ட சாதாரணமான பளிங்கு, இப்போது நன்ருய்த் திருத்தப்பட்டிருக்கிற சாயாதரிசினி என்கிற கருவிக்குப் பிறப்பிடமாயிருந்தாலும், சிறிதளவுகூட இதற்குச் சமானமாயிருக்கவில்லை. புதிதாய் ஏற்படுத்திய சாயாதரிசினியில் அநேகம் பளிங்குத்துண்டுகள் கோக்கப்பட்டிருக்கின்றன. பரீக்ஷிக்கப்படுகிற பொருளின் சாயை அவைகளின் மூலமாய்ப் பலதடவை பிரதிபலித்துவந்து வெகு திருத்தமாய்க் காணப்பட்டு சுலபமாய்ப் பொருளின் உண்மையை அறிவிக்கின்றது. இந்தக் கருவியின் வாலாற்றை இன்னும் அதிகமாய்க் குறித்துக் காட்டலாமாயினும், இந்தக் கருவியை நேரில் வைத்துக்கொண்டு திருஷ்டாந்தப்படுத்தினலல்லது பொருள் விளங்குவது கடினமாயிருக்குமென்று இவ்வளவோடு ஒழிந்தோம்.

இப்படியாக இந்தக் கருவி மிகவும் நன்ருய்த் திருத்தப்பட்டிருந்தாலும், இதைக்கொண்டு சாஸ்திரசம்பந்தமான சிறந்த காரியமொன்றும் இதுவரையில் நடத்தப்படவில்லை. ஆயினும் காலக்கிரமத்திலே இதைக்கொண்டு அநேகம் புதுமைகள் கண்டுபிடிக்கப்படுமென்பது நிச்சயம். இப்போதே சென்ற இருபது வருஷங்களில் இந்தக் கருவியால் புதிதாய் நான்குவித லோஹங்கள் பகுத்தறியப்பட்டன. அவற்றுள் ஒரு பெருமையுண்டாயிருப்பதாய் இப்போது நமது புத்திக்குத் தோன்ருவிடினும், அவை ஏதோ ஒரு சிறந்தகாரியத்திற்காகவே படைக்கப்பட்டிருக்கின்றனவென்பதுமாத்திரம் நிச்சயமானது. நாம் கல்விகற்பதற்கு அவசியமான பல கருவிகளுள் இது மிகவும் சிறந்த ஒரு கருவியாகுமென்பதற்குக் காரணங்கள் அநேகமிருக்கின்றன. இப்போதே இந்தச் சாயாதரிசினியை ரசாயனசாஸ்திரத்திற்கு உபயோகமான கருவிகளுள் சேர்த்திருப்பதனுல், நாளளவில் இதின் உபயோகமெல்லாம் நன்ருய்க் கண்டறியபபட்டு, படிப்பு விருத்தியாக ஆக இந்தக் கருவியின் உபயோகமும் எங்கும் பரவி, ஒரு சிறுகுழந்தையின் கையிலும் சாயாதரிசினியைக் காணும்படியான காலமொன்று நேருமென்று நாம் பூரணமாய் நம்புகிருேம்.

தக்காணத்துப் பூர்வகதை.

ஜவந்தியம்மாள் கதை.

நெடுநாளைக்குமுன்னே அங்கதேசத்தில் சிங்கராஜன் என்று அரசனொருவன் செங்கோல் செலுத்திவந்தான். அவனுக்கு ஒரே பிள்ளை. அந்தப் பிள்ளையினிடத்தில் அரசன் அதிக விசுவாஸம்வைத்திருந்தான். லோகதாஸனென்கிற அந்த ராஜகுமாரன் இளமையும் மேனியும் நல்ல சௌந்தரியமும் உடையவனாயிருந்ததோடுகூட, மிகுந்த சாமர்த்தியமும் உடையவனாய்ப் பார்வதியம்மாளென்னும் ஒரு அழகியைக் கலியாணஞ்செய்துகொண்டு சுகமாயிருந்தான்.

அந்தச் சிங்கராஜனுடைய மந்திரிக்கு ஜவந்தியம்மாளென்று ஒரு மகளுண்டு. அந்தப் பெண் சந்திரோதயமானதுபோல் வெகு அழகாய் எவரும் அதிசயப்படத்தக்கவளாயிருந்தாலும், அவளுடைய நற்குண நற்செய்கைகளைக் கண்டே யாவரும் அதிகமாய் மெச்சினார்கள். லோகதாஸனென்கிற ராஜகுமாரன் ஒருநாள் அப்பெண்ணைப் பார்த்தபோது அவள்மேல் விருப்பங்கொண்டு, அவ்வழகியை அவசியங் கலியாணஞ்செய்துகொள்ளவேண்டுமென்று தீர்மானித்திருந்தான். இந்தச் செய்தி சிலநாளில் அரசன்காதுக்கு எட்டிற்று. அதைக் கேட்டதும் அவன் எங்குமில்லாத கோபமடைந்து, உடனே தன் மகனை அழைப்பித்து ஒரு வார்த்தை சொன்னான்: குழந்தாய்! உன்னைவிட எனக்கு இஷ்டமானவர் வேறொருவருமில்லை; என் ராஜ்யத்தில் சிறந்தபொருள் என்னென்ன உண்டோ, அவையெல்லாம் நான் உனக்கு அழைப்பித்துக் கொடுத்திருக்கிறேன்; பார்வதியம்மாளைப்போல் அழகிய பெண்கூட வேறொருத்தியுண்டோ? அவள் சம்மதமில்லாமல் உனக்கு மறுவிவாகஞ்செய்துகொள்ள விருப்பமிருந்தாலும் சுகமாய்ச் செய்துகொள்ளலாம்; அண்டைநாட்டு ராஜகன்னிகைகள் எத்தனையோபேர் உனக்கு மனையாளாகவேண்டுமென்று பேராவல்கொண்டிருக்கிறார்கள்; அவைகளையெல்லாம் விட்டு ஒரு அற்பமான மந்திரிப்பெண்ணை மணம்புரிவது உன் அந்தஸ்துக்கு என்றைக்காவது ஏற்குமா? இப்படிப்பட்ட ஈனமானகாரியத்தை நீ ஒருபோதும் செய்யாதே; நான் சொல்வதைக் கேளாமல் நீ உன் இஷ்டப்படியே நடப்பாயானால், உன்னை நான் என் நாட்டினின்றும் துரத்திவிடுவேனென்பது நிச்சயம்; உன்னிடத்தில் எனக்கு இருக்கும் அன்பு அதற்கு ஒரு தடையாகமாட்டாதென்று உறுதியாய் நினை;

"ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந்தி யார்மாட்டுந்
தேர்ந்து செய்வதே முறை"

என்கிறபடி, பக்ஷபாதமில்லாமல் எவரிடத்திலும் மத்தியஸ்தமாய்

நடப்பதே அரசுமுறையென்று நீதிநூல்களில் சொல்லியிருக்கிறதாகையால் நான் அதற்கு மாறாக நடக்கமாட்டேனென்றான். லோகதாஸனோ தன் தகப்பன் சொன்ன அந்த நற்புத்தியைக் கேளாமலே, ஜவந்தியம்மாளைக் கலியாணஞ்செய்துகொண்டான். அந்தச் செய்தி காதில் வீழ்ந்தவுடனே சிங்கராஜனும் சொன்னசொல் தவறாமலே தன் நாட்டைவிட்டு ஓடிப்போம்படி பிள்ளைக்குக் கட்டளையிட்டான். ஆயினும் தான் அப்பிள்ளையினிடத்தில் அதிக மனப்பற்று உடையவனாயிருந்ததனால் அவனைத் தனித்து ஓடிப் போகச்சொல்ல மனம்வராமல், அவன் எங்கேயாவதுபோய் ஒன்று மகப்படாமல் அல்லாடித் தவிக்கப்போகிறானென்பதற்காகவும், அவனுடைய அந்தஸ்து யாவர்க்கும் வெளிப்படையாய்த் தெரிய வேண்டுமென்பதற்காகவும் யானை குதிரை முதலான அநேகம் பரிஜனங்களும் பல்லக்குமுதலிய வாகனங்களும் கொடுத்து அனுப்பினான்.

அரசனுடைய கட்டளையை மீறி அத்தேசத்திலிருக்கத் திறமையற்றவனாய் லோகதாஸன் தன் இரண்டு மனைவிகளையும் கூட்டிக்கொண்டு தேசாந்தரம்போகப் புறப்பட்டான். அப்படியே சிறிதுதூரம் போனபிறகு, தன் பரிவாரங்களெல்லாம் தான் சுதந்திரமாய்ப் போவதற்கு ஒரு தடையாயிருக்குமென்று நினைத்துத் தான் ஏறிப்போவதற்கு ஒரு யானையும், தன் மனைவிகளுக்கு ஒரு பல்லக்குமாத்திரம்வைத்துக்கொண்டு மற்றச் சேனைகளையெல்லாம் விட்டுவிட்டு, எங்கேயாவது புதிதாய்த் தனக்கு ஓரிடம் தேடிக்கொள்ள வேண்டுமென்று ஒரு பெருங் காட்டின் நடுவே போயினான். அந்தவிடங்களை அவர்கள் ஒருநாளும் பார்த்ததில்லையாகையால், சிறிதுதூரம் போகையிலேயே வழிதப்பிப்போயிற்று. ஒருநாளும் வருத்தமென்பதையே அறியாத அந்தப் பெண்களுக்கு அப்போது உண்டான வருத்தங்களை என்னவென்று சொல்லலாம்! அந்தக் காட்டிற்புகுந்த மூன்றாநாள்முதல் அவர்கள் வேறுணவில்லாமல் காட்டிலுள்ள காய் கிழங்கு சருகுமுதலியவைகளையே புஜிக்கும்படியாயிற்று. இராக்காலங்களில் காதுக்கினிப்பாய்ச் சிறந்த கீதவாத்தியங்களைக் கேட்பதைவிட்டு மிகவும் பயங்கரமான காட்டுமிருகங்களின் கர்ச்சனைகளைக் கேட்கும்படியாயிற்று. இவைகளையெல்லாம் பார்க்கவே லோகதாஸனுக்கு நாளுக்குநாள் துக்கம் அதிகமாகிக்கொண்டேவந்தது. கடைசியில் அந்த ராஜகுமாரன் தன் மனைவிகள் படும் துன்பத்தைப்பார்த்துப் பொறுக்கமாட்டாமல் மனந்தடுமாறினவனாய், ஒருநாள் இராத்திரி யாவரும் அயர்ந்து தூங்குகிற தருணம்பார்த்து எழுந்து தான் தரித்திருந்த ராஜவேஷத்தைக் களைந்துவிட்டு, ஒரு காவித்துணியைப் போர்த்துக்கொண்டு சன்னியாசிபோல் மாறுவேடம்பூண்டு அந்தக் காட்டின் நடுவே ஓடிப்போனான்.

அவன் புறப்பட்டுப்போன சிறிதுநோத்துக்கெல்லாம் மந்திரி மகளான ஜவந்தியம்மாள் விழித்துக்கொண்டாள். அப்போது பார்வதியம்மாள் விக்கிவிக்கி அழுதுகொண்டிருக்கக்கண்டு, அவள்: அம்மா தோழி! என்னவிசேஷம்? ஏன் இப்படிக் கேவிக்கேவி அழுகிருய் என்று கேட்க, பார்வதியம்மாள்: தோழி! நான் என்னவென்று சொல்லுவேன்! இப்போது நான் தூங்கிக்கொண்டிருக்கையில், நம்முடைய நாயகன் சன்னியாசிவேஷம் தரித்துக்கொண்டு காட்டில் ஓடிப்போனதாகக் கனவுகண்டேன்; உடனே விழித்துக்கொண்டு பார்க்கையில் அது உண்மையாகவேயிருந்தது; நம்முடைய நாயகனைக் காணேன்; நாம்மாத்திரம் தனியாய் இந்தப் பயங்கரமான காட்டினடுவே படுத்திருக்கிரும்; இனி நாம் செய்யவேண்டுவதென்ன? கணவனைப் பறிகொடுத்துப் பிராணனைவைத்துக்கொண்டிருப்பதைவிட உடனே உயிரை மாய்த்துவிடுவதே உத்தமமென்று தோன்றுகிறது என்றுசொல்லி அழுதாள். அதைக்கேட்டு மிகவும் தைரியசாலியான ஜவந்தியம்மாள்: இந்தச் சமயத்தில் நீ அதிகமாய் விசனப்படாதே; ஆபத்துவேளையில் தைரியமாயிருப்பதுதான் தெரிந்தவர்களுக்கு அடையாளம்; இப்போது நாம் அழுதால் நம்முடைய பிராணன்போனதுபோலவே; ஏனெனில், இங்கிருக்கிற பல்லக்குக்காரர்கள் நம்முடைய நாயகன் போய்விட்டதைத் தெரிந்துகொண்டு நம்மை ஒரு பொருளாகமதியாமல் உடனே ஓடிப்போவார்கள்; அவர்கள் போய்விட்டால் நம்மாலொன்றும் மாளாது; ஏதோ ஒரு கொடிய மிருகத்திற்கு நாம் இரையாகவேண்டுவதுதான்; தைரியமாயிருந்தால் நமக்கு ஒருகாலும் குறைவுவாராது; நம்முடைய நாயகன் போய்விட்ட செய்தி இப்போது யாருக்குத் தெரியும்? நம்மால் கூடியவளவு நாம் அவரைத் தேடிப்பார்க்கலாம்; இப்போ நான் அவருடைய உடைகளை உடுத்திக்கொண்டு அவர்போலவே வேஷந்தரித்து ஜவந்திராஜனென்று பேர்வைத்துக்கொள்கிறேன்; நீ என் மனையாள்போல பாவித்து இரு; இந்தப் பல்லக்குக்காரர்களெல்லாம் நான்தான் போய்விட்டதாக நினைத்துக்கொள்ளட்டுமே; இப்படிப்பட்ட பெருங்காட்டில் ஏதோ ஒரு மிருகம் ஒரு பெண்பிள்ளையைப் புஜித்துவிட்டதென்ருல், அது கேட்போர்க்கும் ஒரு அதிசயமாய்த் தோன்ருது; அந்தமட்டும் ராஜா போகாமல் பிழைத்திருக்கிருரே என்று எவரும் சந்தோஷமாயிருப்பார்கள் என்று சொன்னுள்.

அதைக்கேட்டுப் பார்வதியம்மாள் துக்கம் ஓரண்டையிருக்கச் சிரிப்பும் சந்தோஷமும் அடைந்து: தோழி! நீ நல்ல யோசனைசொன்னுய்! இந்த ஆபத்துவேளையிலும் தைரியத்தைக் கைவிடாமற்பேசுகிறையே; அப்படியே நடப்போம்; நான் உன் மனைவிபோல் பாவித்துக்கொண்டிருப்பதற்கு ஆக்ஷேபமென்னவென்று சொன்னுள்.

அப்படியே மறுநாள் காலையில் ஜவந்தியம்மாள், தன் நாயக

னுடைய உடுப்புகளைத் தான் தரித்துத் தன் நாயகன்போலவே யானைமேல் ஏறிக்கொண்டு, பார்வதியம்மாளைப் பல்லக்கில் ஏற்று வித்து, வழக்கப்படியே ஒரு நல்ல நாட்டுக்கு வழிதேடிக்கொண்டு போகப் புறப்பட்டாள். ஜவந்தியம்மாளைக் காணுமற்போனது கண்டு பல்லக்குக்காரர்கள் ஒருவர்க்கொருவர்: இதென்ன அதி சயம் பார்த்தாயா? தனவான்களெல்லாம் இப்படித்தான் தன் நயத் தையே பாராட்டுகிறவர்களாய் இருப்பார்களோ? நமது இளவரசர் எவ்வளவோ முயற்சிசெய்து மந்திரிமகளான ஜவந்தியம்மாளைக் கலியாணஞ்செய்து, அதனுல் இப்படிப்பட்ட சங்கடங்களையெல் லாம் வருவித்துக்கொண்டார்; உண்மையாய்ப்பார்த்தால் அவளவ் வளவு அழகுள்ள பெண் இவ்வுலகத்தில் எங்குமில்லையென்றே சொல்லலாம்; நம்முடைய சிற்றரசரும் அந்த நாயகியைத் தன் உயிரைவிட அதிகமாய் நேசித்துவந்ததாகவே தெரியவருகிறது; இப்போது அந்த மகளை இந்தப் பெருங்காட்டில் ஏதோ ஒரு கொடிய மிருகம் பிடித்திழுத்துக்கொண்டுபோய்விட்டதோ என் னவோ? அந்தத் தேவியாரைக் காணேமே; அப்படியிருந்தும் அதைக்கண்டு இந்த ராஜா ஒரு சொட்டு கண்ணீராவது சிந்தமாட் டாரா? இப்படிப்பட்ட கல்நெஞ்சு உடையவர்கூட உலகத்திலுண் டோ என்று சொல்லி ஆச்சரியப்பட்டுக்கொண்டே போனுர்கள்.

அதிகமான யுக்தியும் தைரியமும் உள்ள மந்திரிகுமாரத்தியின் ஆலோசனைப்படியே அவர்கள் அக்காட்டிற்சென்றுர்கள். அப்ப டியே போகையில் ஒருநாள் அக்காட்டினின்றும் விடுபட்டு வெ ளியேவந்து சேர்ந்தார்கள். அங்கே வெகுதூரத்தில் சிறந்த நகா மொன்று தெரிந்தது. அதைநோக்கிச் செல்லுகையில், அப்பட்ட ணத்து ஜனங்கள் இவர்களுடைய யானையைக்கண்டு ஓடிவந்து பார்த்து, ஒரு அரசனும் அரசியும் வருவதைத் தெரிந்துகொண்டு உடனே தம் அரசனண்டைபோய்: இதோ சிறந்த ஆடை ஆபா ணங்கள் அணிந்த ஒரு ராஜகுமாரனும், யாவரும் விரும்பத்தக்க சவுந்தரியமுள்ள ஒரு ராஜகுமாரத்தியும் வருகிருர்களென்றுசொ ல்ல, அதைக்கேட்டு அந்த ராஜன்: அவன் யார்? எங்கிருந்து ஏன் வருகிருன்? என்று விசாரித்துக்கொண்டுவரும்படி தூதர்களை அனு ப்பினுன். அவர்கள் வந்து கேட்டதற்கு ஜவந்தியம்மாள்: என் பெ யர் ஜவந்திராஜன்; என் தந்தை என்னிடத்தில் மிகவும் கோபங்கொ ண்டு என்னைத் தன் நாட்டினின்றும் துரத்திவிட்டார்; அவர் கட் டளைப்படியே நான் என் மனையாளுடன் புறப்பட்டுவந்துகொண் டிருக்கையில் நடுக்காட்டிலே வழிதப்பிப்போய்விட்டது. பலநாள் பலவிதமாய்த் துன்பங்களை அனுபவித்துக் கடைசியில் தெய்வகதி யாய் இங்கேவந்து சேர்ந்தோமென்றுள்.

அந்தச் செய்தியைக் கேட்டு அந்த ராஜாவும் மற்றுமுள்ள கன வான்களும் இவ்வளவு தைரியமும் பெருமையுமுடையவன் ஒரு

வனை நாம் இதுவரையில் எங்குங் கண்டதில்லையே என்றுசொல்லி ஆச்சரியப்பட்டார்கள். பின்பு அத்தேசத்தரசன் ராஜவேஷந்தரித்திருந்த அந்தப் பெண்ணைவந்து பார்த்து: ஓ ராஜகுமாரனே! நீ எங்கும் போய்த் திரியவேண்டாம்; என்னுடைய ராஜ்யத்தில் ஏதாவது ஒரு உத்தியோகத்தைக் கைக்கொள்ள உனக்கு விருப்பமிருந்தால் அப்படியே செய்யலாம்; சம்பளம் எவ்வளவுவேண்டுமானாலுங்கொடுக்கிறேன் என்றுசொல்ல, அதைக்கேட்டு ஜவந்தியம்மாள்: எவாண்டையும் எவ்விதமானவேலையும் நான் இதுவரையில் செய்து வழக்கப்பட்டதில்லை; ஆயினும் தாங்கள் தயவுசெய்து என்னைக்காப்பாற்றவேண்டுமென்பதற்காகவே இப்படி உத்தரவுசெய்கிறீர்களாகையால், அப்படியே நடத்தலாம்; என் கையில் எந்த வேலையைக்கொடுத்து நடத்தலாமென்று தங்கள் சித்தத்திற்குத் தோன்றுகிறதோ அதைக் கொடுத்தால், தெரிந்தவளவு வஞ்சனையில்லாமல் சரியாக நடத்தக் காத்திருக்கிறேன் என்று சொன்னாள். அதைக்கேட்டு அந்த ராஜா மாதம் 20,000 ரூபாய் சம்பளம் ஏற்படுத்திச் சிறந்த மாளிகையும் ஒன்று கட்டிக்கொடுத்து வெகு மேன்மையாக நடத்திவந்தான். வரவர அப்பெண்ணினிடத்தில் அவனுக்கு வெகு நம்பிக்கையும் பிராமாணிக புத்தியு முண்டாயிற்று. ஏதாவதொருபலத்தகாரியஞ்செய்ய வேண்டுவதாயிருந்தால் அவளுடன் தீர ஆலோசித்தே நடத்துவான்; முக்கியமான அநேக ராஜகாரியங்களை அவளதீனமாகவே விட்டு வைத்தான். அவள் நற்குண நற்செய்கையுடையவளாயிருந்ததனால், திடீரென்று அவளுக்குக் கிடைத்த பெரும்பாக்கியம் ஒருவருக்கும் பொறாமைக்கிடமாகவில்லை. யாவரும் அவளை அதிகமாய் நேசித்துக் கனப்படுத்தினார்கள். இப்படியே வெகு மேன்மையாக ஜவந்தியம்மாள் பார்வதியம்மாளுடன் பனிரண்டு வருஷகாலம் அப்பட்டணத்திலேயே மாறுவேஷம் பூண்டு சுகமாக வாழ்ந்திருந்தாள். இவள் ராஜாவோ அன்றோவென்கிற சந்தேகங்கூட ஒருவர்க்கும் உண்டாகவில்லை. அவள், பார்வதியம்மாள் எவரோடாயினும் அதிகமாய் நெருங்கிப்பேசவாவது, பிறர் யாராவது வந்து அவளோடு அதிகமாய் நேசித்திருக்கவாவது ஒன்றுக்கும் இடங்கொடுக்கவில்லை. ஏனெனில், பார்வதியம்மாள் யாரோடாவது ஒருவேளை ஞாபகப்பிசகாய் 'இவள்ஜவந்தியம்மாள்' என்று சொல்லிப்போடுவாள்; சொல்லிப்போட்டால் பிறகு தான் வேறொன்றும் செய்வதற்கில்லை; தன் உடன் பிறந்தாளைப்போல் நடத்திவந்தாலும், அவளைத் தன் கையினாலேயே உடனே கொன்றுபோடும்படி நேரிடும் என்றெண்ணி இச்செய்தியை வெளிப்படையாகவே அவளுடனுஞ்சொல்லி நிர்ப்பந்தஞ்செய்திருந்தாள்.

இப்படியிருக்கையில், அப்பட்டணம் ஒரு பெருங்காட்டுக்குச் சமீபத்திலிருந்ததனால், ஒருநாள் ராத்திரி அதிக பயங்கரமான இரைச்சலொன்று அக்காட்டிலிருந்து கேட்டது. அந்தக்

கூச்சலினுல் தூங்கிக்கொண்டிருந்த ராணி கண்ணை விழித்துக்கொண்டு தன் கணவனை எழுப்பி: என் பிராணநாதனே! இதோ ஏதோ ஒரு பேரிரைச்சல் கேட்கிறது; அதைக் கேட்கும்போது எனக்கு வெகு பயமாயிருக்கிறது; நித்திரை பிடிக்கவேயில்லை; அது எதினுடைய சத்தமோ, எங்கிருந்து வருகிறதோ, யாரையாவது போய்ப் பார்த்துவரச்சொல் என்று சொன்னுள். அதைக்கேட்டு ராஜா உடனே தன் சேவகர்களை வரவழைத்து: நீங்கள் இப்போதே புறப்பட்டுக் காட்டுக்குப் போய், இது எதினுடைய இரைச்சலோ? ஏன் அது இப்படிக் கூச்சலிடுகிறதோ தெரிந்துகொண்டுவாருங்கள் என்றுசொல்ல, அவ்விரவு மிகவும் இருண்டிருந்ததனுலும் அந்தச் சத்தம் மிகவும் கொடியதாயிருந்ததனுலும் அவர்கள் அதிகமாய்ப் பயந்து ராஜாவைப்பார்த்து: மகாப்பிரபுவே! இந்தக் கூச்சலைக் கேட்கும்போதே எங்களுக்கு வெகு திகிலாயிருக்கிறது; அந்தவிடத்திற்கு நாங்கள் எப்படிப் போகத்துணிவோம்; தங்களுக்கு இவ்வளவு வருத்தமென்ன? தங்களுக்கு மிகவும் இஷ்டனுய் ராஜகுமாரன் ஒருவன் தங்கள் அதீனத்திலிருக்கிறுனல்லவா? இப்போது அவனை அனுப்புவதற்குத் தடையென்ன? அவன் அதிகமாய்த் துணிவும் பராக்கிரமமுமுடையவன்; மேலும் தாங்கள் யாவர்க்குங் கொடுப்பதைவிட அவனுக்கு அதிகமாகச் சம்பளங்கொடுத்துவருகிறீர்களே; இப்படிப்பட்டகாலத்தில் அவன் உதவாமற்போனுல் அவனுக்கு அவ்வளவு பொருள் கொடுத்துக் காப்பதற்குத்தான் பயன் என்னவென்று சொன்னுர்கள். அப்படியே செய்யும்படி ராஜன் கட்டளையிடவே, யாவரும் ஜவந்தியம்மாள் வீட்டுக்குப்போய் இச்செய்தியை அவளுக்குத் தெரிவித்தார்கள். அதைக்கேட்டு ஜவந்தியம்மாள் சந்தோஷமடைந்து, அப்படியே நான் போய் அந்தச் சத்தத்தின் காரணத்தைத் தெரிந்துகொண்டுவருகிறேன் என்று சொல்லிப் புறப்பட்டாள்.

இவர்களுக்கெல்லாம் இப்படித் திகிலுண்டாக்கின சத்தம் ஒரு ராக்ஷதனுடைய பேரிரைச்சல். முதனுள் அந்தக் காட்டிலே ஒரு திருடனைத் தூக்குபோட்டார்கள். அந்தத் தூக்குமரத்தில் தொங்குகிற பிணத்தை வாள்போன்ற தன் நகங்களால் பிடுங்கித்தின்னவேண்டுமென்று ஒரு ராக்ஷதன் அந்தத் தூக்குமரத்தடியில் வந்துநின்று அதை எட்டப்பார்த்தான். அது அவன் கைக்கு எட்டாத உயரத்திலிருந்ததனுல் எத்தனைதரந் தாவித்தாவி எட்டமுயன்றும் எட்டவில்லை; அதனுல் அந்த ராக்ஷதன் மிகவும் ஏமாந்தவனுய் ரோஷம் அதிகமாகி வீரிடத்தொடங்கினுன்.

மந்திரிகுமாரத்தி அங்கேபோய்ப் பார்த்தபோது, ராக்ஷதன் அவள் கண்ணுக்குத் தென்படவில்லை. ஒரு கிழப்பெண்பிள்ளை வெகு அழகான பொற்புடவை உடுத்திக்கொண்டு, தலைக்குமேல் தூக்குமரத்தில் சவம் காற்றில் ஆடித் தொங்கிக்கொண்டிருக்க, கீழே நின்று தலையா

டக்கைகுலேக்க கையைப்பிசைந்து அழுதுகொண்டிருந்தாள். அது கண்டு ஜவந்தியம்மாள்: ஓ பாட்டியாரே! நீர் விசனப்படுவதற்குக் காரணமென்னவென்று கேட்க, அந்த ராக்ஷதன்: (ராக்ஷதனே அப்படிப் பெண்ணாகத் தென்பட்டது.) ஐயோ! குழந்தாய்! என் துக்கத்தை ஏன்கேட்கிறாய்? இதோ இந்தத் தூக்குமரத்தில் தொங்குகிறவன் என்னுடைய மகன்; ஐயோ! இவனைக் கொன்றுபோட்டார்களே! உயிர்போன பிணந்தானே இதோ தொங்குகிறது! இந்தப் பிணத்தையாவது கட்டிக்கொண்டு கொஞ்சநேரம் அழுவோமென்றால் அதை இந்தத் தூக்குமரத்தினின்றும் அவிழ்த்துக் கீழேதள்ள என்னால் ஆகவில்லை; அதுவோ ஆகாயத்தில் கட்டியிருக்கிறது; நானோ தள்ளாதகிழவியாய் முதுகுங் கூனிக்கிடக்கிறேன் என்று சொல்லி அழுதாள். அதைக்கேட்டு ஜவந்தியம்மாள்: அவளிடத்தில் அநுதாபப்பட்டு: அம்மா! நீ விசனப்படாதே; நான் கீழே நின்று உன்னைத் தாங்குகிறேன்; நீ என் தோள்மேல் ஏறிக்கொள்வாயானால் சுலபமாய் எட்டி உன் மகனை அவிழ்த்துக்கொள்ளலாம் என்றுசொல்லித் தோளைக்காட்டினாள். அந்த ராக்ஷதனும் அவள் தோள்மேல் ஏறிக்கொண்டான். கீழேநின்று அவனைத் தாங்கிக்கொண்டிருந்த ஜவந்தியம்மாள், நெடுநேரம் கீழிறங்காமல் ராக்ஷதன் மேலேயே நின்றுகொண்டிருக்கவே, அந்தப் பிணத்தின் கழுத்தில் கட்டியிருக்கிற கயிற்றை அவிழ்ப்பது வருத்தமாயிருக்கிறதோ என்னவோ? அதனாலேதான் நேரமாகிறதென்று நினைத்துக் கொண்டிருந்தாள். இப்படியிருக்கையில் மேகத்தில் மறைந்திருந்த சந்திரன் திடீரென்று வெளித்தோன்றிப் பிரகாசித்தான். அத்தருணத்தில் ஜவந்தியம்மாள் அண்ணாந்துபார்த்தாள். பார்க்கவே, தன்மேல் கிழப்பெண்பிள்ளை ஒருத்தி ஏறிக்கொண்டிருக்கிறாளென்று எண்ணியிருக்க அவளைக்காணாமல், ஒரு பயங்கரமான ராக்ஷதன்நின்று அந்தப் பிணத்தைப் பிடுங்கித்தின்று எலும்புகளைக் கீழே எறிந்துகொண்டிருக்கக்கண்டு, மிகவும் பயந்து பின்னே ஒதுங்கினாள். அந்த ராக்ஷதனும் உயர்ந்த பொற்புடவையொன்றை அவள்கையில் போட்டுவிட்டு வீரிட்டுக்கொண்டு ஓடிப்போயினான்.

ஜவந்தியம்மாள் மகா தைரியசாலியாகையால் இந்த அற்புதத்தைக்கண்டு மனதில் ஒன்றுங் கலக்கங்கொள்ளாமல் பட்டணத்திற்குப்போய், இச்செய்தி ஒன்றையும் உள்ளபடி சொல்லி ராணிக்குப் பயமுறுத்தக்கூடாதென்று, அங்கே ஒரு தூக்குமரத்தில் தன் மகனைக் கட்டித் தொங்கவிட்டிருப்பதுகண்டு ஒரு கிழப்பெண்பிள்ளை புலம்பிக்கொண்டிருந்தாள்; இதுதவிர மற்றொருவிசேஷமும் இல்லையென்று சொல்லிவிட்டுத் தன் வீட்டுக்குப்போய் ராக்ஷதன் கொடுத்த பொன்தகடியைப் பார்வதியம்மாளுக்குக் கொடுத்து அவளுடன் அங்கேயே சிலகாலம் க்ஷேமமாய் இருந்தாள்.

(இன்னும் வரும்.)

சுலபமாய்ப்பார்க்கக் கற்றுக்கொடுக்கிறேன்; அதைவிடச் சிறந்த வித்தை ஒன்றுமில்லை; அதை நீ கற்றுக்கொள்வாயானால் உன் கண்ணுக்குத் தெரியாதபொருள் உலகத்தில் ஒன்றுமிராதென்றான். அந்தப் பிள்ளையும் அதற்குச் சம்மதித்து அவனைப் பின்தொடர்ந்து போனான்.

மூன்றாங்குமாரன் தன் வழியேபோகையில் அவன் எதிரே வேட்டைக்காரன் ஒருவன் நேர்பட்டான். அந்த வேட்டைக்காரன் அவனுடைய செய்தியை விசாரித்து அவனைத் தன்னுடன் கூட்டிக்கொண்டுபோய் வேட்டையாடுவதற்குவேண்டிய பல சாஸ்திரங்களையுங் கற்பித்துக்கொடுத்துக் குறிவைத்து அடிப்பதில் அவனுக்குச் சரியானவன் ஒருவனுமில்லையென்று சொல்லும்படி அவ்வளவு சாமர்த்தியமுண்டாக்கி அவன் தன்னைவிட்டுப் போம்போது சிறந்த வில்லும் ஒன்று கொடுத்தனுப்பினான்.

இவர்செய்தி இப்படியிருக்க, நான்காம் குமாரன் ஒருவழியாய்ப் போகையில் தையற்காரன் ஒருவன் அவனைக்கண்டு: நீ எங்கே போகிறாய்? உனக்குத் தையல்வேலை கற்க விருப்பமுண்டாவென்று கேட்டான். அதற்கு அந்தச் சிறுவன்: அதை இப்போதே அவ்வளவு நிச்சயமாய்ச் சொல்லக்கூடாது; பொழுதுவிடிந்தாற் பொழுது போகிறவரையில் காலை மடக்கிக்கொண்டு உட்காந்திருப்பதும், கையோயாமல் ஊசியைக் குத்திக்குத்தி வாங்கிக்கொண்டிருப்பதும் எனக்கு எளிதாய்த் தோன்றவில்லையென்று சொல்ல, தையற்காரன்: அதோ அதோ! அதுதான் பிசகான நினைப்பு; நீ சங்கதி தெரிந்துகொள்ளாமற்பேசுகிறாய்; நான் கற்றுக்கொடுக்கப்போகிறது அப்படிப்பட்டதன்று; அது வேறு; அது வெகு சுலபமாயும் இனிப்புண்டாக்குவதாயுமிருப்பதுமன்றி கண்ணியமாயுமிருக்கும் என்று சொன்னான். அதைக்கேட்டு அந்தச் சிறுவன் மிகவும் சந்தோஷமாய் அந்தப் புது நேசனோடு கூடிப்போய்த் தையல்வேலையை வெகுநன்றாய்க் கற்றுக்கொண்டான். கற்றுக்கொண்டு தன் தேசத்திற்குப் புறப்படும்போது அந்தத் தையல்வேலைக்காரன், இதைக்கொண்டு நீ எவ்வளவு கடினமாயிருக்கட்டும், எவ்வளவு நுட்பமாயிருக்கட்டும், எப்படிப்பட்டபொருளையும் ஒரு தையல்கூட வெளியே தெரியாமலிருக்கும்படி வெகு நயமாகத் தைக்கலாமென்று சொல்லி, ஒரு சிறந்தஊசியைப் பரிசாகக் கொடுத்தனுப்பினான்.

முன் அந்த நான்கு பிள்ளைகளும் சங்கேதஞ்செய்து போனபடி

யே சரியாய் நான்குவருஷமாகி அவர்கள் ஏற்படுத்தியநாளும் வந்தது. அன்றையதினம் அந்நால்வரும் அந்தந்த வழியேவந்து முன் ஏற்படுத்தியவிடத்தில் வந்துகூடி ஒருவனையொருவர் அணைத்து முத்தமிட்டுக்கொண்டு சந்தோஷமாய்த் திரும்பித் தங்கள் ஊர்போய்ச் சேர்ந்தார்கள். தன் மக்கள் வந்ததைக்கண்டு தகப்பன் மனம் பூரித்து, ஒன்றுங்குறைவில்லாமல் க்ஷேமமாய் வந்தீர்களாவென்று நல்வரவு விசாரித்தான். அந்தப் பிள்ளைகள் தாங்கள் போனதும், போய் ஒவ்வொருவர் ஒவ்வொரு வித்தையைக் கற்றுக்கொண்டு வந்ததும் சொல்லித் தகப்பனுக்குச் சந்தோஷமுண்டாக்கினார்கள். ஒரு பெரிய மரத்தடியில் உட்காந்து அவர்கள் அந்தக் கதைகளைச் சொன்னார்கள். அந்தப் பிள்ளைகள் சொல்லி முடித்ததும், தகப்பன் அவர்களுடைய திறமையைப் பரீக்ஷித்துப்பார்க்கவேண்டுமென்று நினைத்து அம்மரத்தை அண்ணாந்துப்பார்த்துப் பின்பு தன் இரண்டாம் பிள்ளையைப்பார்த்து: இம்மரத்தின் உச்சியில் இரண்டு கிளைகளுக்கு நடுவே பக்ஷிக்கூடொன்று இருக்கிறது; அதில் எத்தனை முட்டைகளிருக்கின்றன தெரிந்துசொல்லென்றான். குறிபார்ப்பதில் மிகவும் வல்லவனான அந்தக் குமாரன் உடனே தன் நச்சுக்குழாயையெடுத்து அதன் வழியாய்ப்பார்த்து ஐந்து முட்டைகள் இருக்கின்றனவென்றான். அதைக்கேட்டுத் தகப்பன் மூத்தமகனைப் பார்த்து: நல்லது; அந்தக் கூட்டில் அவயங்காத்துக்கொண்டிருக்கிற தாய்பக்ஷியைச் சிறிதும் தொந்தரைசெய்யாமல் அந்தக் கூட்டை அப்படியே எடுத்துக் கீழேகொண்டுவா என்று சொல்ல, திருட்டுத் தனத்தைக் கரைகண்டவனான அந்த மகன் உடனே அம்மரத்திலேறிப்போய் அக்கூட்டில் முட்டைகளின்மேல் உட்காந்திருக்கிற தாய்ப்பக்ஷியைச்சிறிதும் அதட்டாமலும் அலட்டாமலும் அதன் கீழிருந்த முட்டைகள் ஐந்தையும் எடுத்துக்கொண்டுவந்து தகப்பன் கையில்கொடுத்தான். அவன் அவைகளை வாங்கி ஒரு பலகையில் நான்கு மூலையிலும் நான்கும் மையத்தில் ஒன்றுமாகவைத்து, குறிபார்த்தடிப்பதில் மிகவும் வல்லவனான வில்லாளியையழைத்து: ஒரே அடியில் இவ்வைந்தையும் நீ சரிபாதியாகத் துண்டிக்கக்கடவை என்று சொல்ல, அவன் உடனே வில்லைவளைத்துத் தந்தை மனம்போலவே ஒரே அடியில் அவ்வைந்து முட்டைகளையுந் துண்டித்தான். திக்குக்கொன்றாயிருந்த ஐந்து முட்டைகளையும் ஒரே அடியில் சரிபாதியாக அறுத்தவன் எவ்வளவு வல்லவனாயிருக்க வேண்டும்! அதைக்கண்ட தகப்பன் பின்பு கடைக்குட்டியைப் பார்த்து: இனி உன் வேலையொன்றுதான் மிகுதியாயிருக்கிறது. இப்போது அறுப்புண்டதனால், இவைகளுக்குள்ளிருக்கும் பக்ஷிகளுக்கு, யாதொரு தீங்கும் உண்டாகாதபடி இம்முட்டைகளைத் தைக்கமாட்டுவையா என்றான். அதைக் கேட்டவுடனே தையல்வேலையில் கைதேர்ந்தவனான அம்மகன் உடனே தன் ஊசியை எடுத்து

வெகுநுட்பமாய்த் தைத்துவிட்டான். தைத்தானதும் திருடன் அவைகளை எடுத்துக்கொண்டு மரத்திலேறி முன்போலவே அங்கிருந்த பக்ஷிக்குத் தெரியாமலே அம்முட்டைகளைக் கூட்டில் வைத்துவிட்டிறங்கினான். வழக்கப்படியே தாய்ப்பறவை கொஞ்சகாலம் அவயங்காத்துக்கொண்டிருந்தது; சிலநாள்கழித்து அவையெல்லாம் குஞ்சுபொரித்தபோது அந்தக் குஞ்சுகளெல்லாம் அறுபட்டுத் தைப்புண்டவிடமான கழுத்தில் ஒரு செங்கோடு உடையவைகளாயிருந்தன.

இப்படித் தன் மக்கள்செய்த செய்கையின் திறத்தைக் காணவே அந்தக் கிழவன் மிகவும் சந்தோஷமடைந்து: பிள்ளைகளே! நீங்கள் உங்கள் காலத்தைச் சரியாய்ப்போக்கி மிகவும் உபயோகமான வேலைகளை நன்றாய்க் கற்றுக்கொண்டதைக் கண்டு எனக்கு வெகு சந்தோஷமாயிற்று. இதற்காக நான் உங்களை மிகவும் பெருமைப் படுத்தவேண்டும்; ஆயினும் உங்கள் நால்வருக்குள்ளே எவன் அதிகமான வல்லமையுடையவனோ அதை என்னால் அறியக்கூடவில்லை. உலகத்தாருக்கெல்லாம் தெரியும்படியாய் உங்களுடைய திறமையைக்காட்டத் தருணம்வாய்ப்பதை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன் என்றான்.

இது நடந்த சிலநாளையில் அப்பட்டணத்து அரசன்மகளை ராக்ஷதனொருவன் இழுத்துக்கொண்டுபோனானென்று ஒரு கூச்சல் அந்த நாட்டிலுண்டாயிற்று. அரசனும் தன் பெண்ணைக் காணாமற்போகவே இரவும் பகலும் வேறுநினைவில்லாமல் இதற்கென்ன செய்யலாமென்று யோசித்து, தன் மகளை எவனொருவன் கண்டு அழைத்துக்கொண்டுவருகிறானோ அவனுக்கே அப்பெண்ணைக் கலியாணஞ்செய்துகொடுப்பதாகப் பிரசித்தப்படுத்தினான். அதைக் கேட்டு அந்தச் சகோதரர்கள் நால்வரும் தங்களுடைய திறமையைக்காட்டத் தாங்கள் எதிர்பார்த்திருந்த தருணம் இதுதானென்று நினைத்துத் தாங்கள் போய் அப்பெண்ணை மீட்டுக்கொண்டுவருவதாய் ஒப்புக்கொண்டார்கள். அவர்கள் புறப்படுகையில், தூரத்துப் பொருளை வெகு நன்றாய்ப்பார்க்கத் திறமையுடையவனான இரண்டாங்குமாரன் 'அப்பெண் இருக்குமிடத்தை நான் இப்போதே கண்டறிந்து சொல்லுகிறேன்' என்று தன் கையிலிருந்த தூரதிருஷ்டிக்கண்ணாடியால் பார்த்து: அந்தப் பெண் இதோ என் கண்ணுக்குத் தெரிகிறாள்; வெகுதூரத்துக்கப்பால் நடுக்கடலில் ஒரு பெரும் பாறையில் உட்காந்திருக்கிறாள்; ஒரு ராக்ஷதன் அவளைக் காத்துக்கொண்டிருக்கிறான் என்று சொல்லி உடனே அரசனண்டைபோய், கடலில் போவதற்குத் தானும் தன் சகோதரர்களும் ஏறிப்போம்படி ஒரு கப்பல் கேட்டுவாங்கிவந்து அதன்மேல் தன் உடன்பிறந்தவர்களோடுகூட ஏறிப்போனான். அந்த ராஜகுமாரத்தியிருந்த கற்பாறைக்குச் சமீபத்தில் போனபோது அவள்மாத்திரம் இவர்கள் வரு

வதைப்பார்த்தாள். ராக்ஷதனே அவள் மடியில் தலையை வைத்துக்கொண்டு அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தான். அவர்களிருந்த இருப்பைப்பார்த்து வில்லாளி: அந்த ராக்ஷதனைச் சுட எனக்குத் துணிவுண்டாகவில்லை, சுட்டால் இரண்டுபேர்மேலும் படுமோ என்னவோவென்று திகிலாயிருக்கிறதென்றான். அதைக்கேட்டுத் திருடன்: ஆனால் நான் என் உபாயத்தைச் செய்கிறேனென்று சொல்லி எழுந்துபோய் வெகு தந்திரமாய் அந்தப் பெண்ணை எடுத்துக்கொண்டு வந்துவிட்டான். ராக்ஷதனுக்கு இந்தச் செய்தி சிறிதுந் தெரியவில்லை; குறட்டை பின்னும் அதிகமாயிற்று.

இந்தச் சகோதரர் நால்வரும் அப்பெண்ணைத் தூக்கிக்கொண்டவுடனே வெகு சந்தோஷமடைந்து வேகமாய் தம்மூருக்குக் கப்பலை ஒட்டினார்கள். அவர்கள் புறப்பட்ட சிறிதுநேரத்தில் ராக்ஷதன் விழித்துக்கொண்டு தன் பக்கத்தில் ராஜகன்னிகையைக் காணாமல் பெருங்கோபத்தோடு ஆகாயமார்க்கமாய் அவளைத் தேடிக்கொண்டு புறப்பட்டு வெகுவேகமாய் இவர்கள் கப்பலண்டைவந்துசேர்ந்தான். அவன் தங்கள் கப்பலுக்கு நேராய்வந்து ஆகாயத்தினின்றும் இறங்கக்கண்டு வில்லாளி ஒரு பாணம்விட்டு அவன் கழுத்தைத் துண்டாக்கினான். பெரும்பாரமான அவன் உடல் புதீலென்று கப்பலில்வீழவே அந்தச் சுமைதாங்கமாட்டாமல் கப்பல் சுக்கல் சுக்கலாய் உடைந்துபோயிற்று. அந்த ஆபத்துவேளையில் தெய்வாதீனமாய் இரண்டு பெரும்பலகை அகப்பட்டன. அகப்படவே தண்ணீரில் மிதந்து தத்தளித்த அவ்வைந்துபேரும் அதன்மேல் ஏறிக்கொண்டார்கள். ஏறினவுடனே ஒவ்வொரு பலகையும் ஒவ்வொரு மூலையாய்ப்போக ஆரம்பித்தது; அதுகண்டு தையற்காரன் உடனே தன் கையிலிருந்த சிறந்த ஊசியால் அவ்விரண்டு பலகையையும் ஒன்றாய்ச் சேர்த்துத் தைத்து அதில் உட்காந்துகொண்டு பிறகு கப்பலின் ஒவ்வொரு பலகையையும் சிறிதும் துவாரமில்லாமல் சேர்த்துத் தைத்தான். அந்தக் கப்பல் முன்னிருந்ததைவிட இப்போது அதிக உறுதியாய்விட்டது. அதில் ஏறிக்கொண்டு பின்பு யாதொரு அபாயமுமில்லாமல் யாவரும் சுகமாய் வீடுபோய்ச் சேர்ந்தார்கள்.

இனி நாம் காணப்போகிறதில்லையென்று நினைத்து நிராசைசெய்திருந்த மகள் மறுபடியும் வந்துசேரவே அரசன் அதிக சந்தோஷமடைந்து, அப்பெண்ணைக் கொண்டுவந்துகொடுத்த நான்கு பிள்ளைகளையும் பார்த்து: உங்களுக்கு யாருக்காவது ஒருவர்க்கு என் மகளைக் கலியாணஞ்செய்துகொடுக்க நான் சித்தமாயிருக்கிறேன்; இன்னாரென்று ஏற்படுத்திச்சொல்ல என்னாலாகாது; அதை நீங்கள்தாமே நிதானித்துச் சொன்னீர்களானால் உடனே கலியாணம் நடத்தலாம் என்றான்.

அதைக்கேட்கவே அப்பிள்ளைகளுக்குள் பெரிய விவாதமுண்

டாயிற்று. ஏனெனில் ஒவ்வொருவனும் தனக்குத்தான் அதிக பாத்தியதை உண்டென்று ஸ்தாபிக்கத்தொடங்கினார்கள். தூரப்பார்வையுடையவன்: நான் அவளிருந்தவிடத்தைப் பார்த்துச் சொல்லாவிட்டால் உங்களுடைய காரியங்களெல்லாம் வெறுங்கையை முழம்போடுவதுபோலல்லவோ ஆகும். ஆகையால் அவள் எனக்குத்தான் மனையாளாகவேண்டுமென்றான். திருடன்: தந்திரமாய் அவளை எடுத்துக்கொண்டுவர நான் இல்லாமற்போனால் நீ பார்த்தது எதற்காகும்; அவள் என் மனையாள்தானென்றான். என்னுடைய பாணம் அந்த ராக்ஷதனைக் கொல்லாமற்போனால் யாவரும் அன்றைக்கே ராக்ஷதனுக்கு இரையாய்ப்போகவேண்டாமா? எனக்கில்லாமல் அவள் பின் யாருக்குத்தான் கிடைப்பாளோ பார்ப்போமென்று வில்லாளி வாதாடினான். இவையெல்லாம் நல்ல விந்தையாயிருக்கிறது! நான் உடைந்தகப்பலைச் சேர்த்துத் தைக்காவிட்டால் அப்போதே நீங்கள் கடலில் மூழ்கிப்போகமாட்டீர்களா? வெண்ணெய்திரளும் போது தாழியுடைந்ததுபோலல்லவோ ஆகும்; ஆதலால் எனக்குத்தான் அவள் கிடைக்கவேண்டுமென்று தையற்காரன் எடுத்துச் சொன்னான். இவைகளையெல்லாங் கேட்டுக்கொண்டிருந்த அரசன் யாருக்காகச் சொல்லமாட்டுவன்! உங்களுடைய பாத்தியதை ஒன்றுக்கொன்று குறைந்திருக்கவில்லை; இந்த ஒரு பெண்ணை நான் யாருக்கென்று கொடுப்பேன்; இவளுக்குப் பதிலாய் என் ராஜ்யத்தில் பாதி கொடுத்துவிடுகிறேன்; அதை நீங்கள் நால்வரும் சரியாகப் பகுந்துகொள்ளுங்கள் என்றான்.

இப்படி அரசன்சொன்ன தீர்மானத்தைக்கேட்டு அவர்கள்: அதுதான் சரி; அப்படியிருந்தால்தான் நாங்கள் ஒருவர்க்கொருவர் பகையில்லாமல் ஒருமைப்பட்டிருப்போம்; அப்படிச் செய்வதே நலமென்றார்கள். அரசன் அப்படியே பாதிராஜ்யத்தை அவர்கள் அதீனத்தில் ஒப்புவித்தான். அந்தப் பிள்ளைகள் நால்வரும் வெகு சந்தோஷமாய் அந்த பாதிராஜ்யத்தை வைத்துக்கொண்டு சுகமாயிருந்தார்கள்.

சமாசாரம்.

ருஷியருடைய நிலை. — துருக்கருடைய பலங்குறைந்து தங்கள் பலம் மேலிடவே, அந்தச் சாய்காலைக்கொண்டு ருஷியர் இன்னும் மற்ற நாடுகளின்மேலும் படையெடுத்துப்போய் ராஜதானியாகிய கான்ஸ்தாந்திநோபில் நகரத்தில் பிரவேசிக்க முயன்றார்கள். வெகுகாலமாய் அவர்களுக்கு இந்த இந்துதேசத்தின்மேலேயே நோக்கம் உண்டென்பதையும் அறியோமா? இத்தனைநாளாய்த் துருக்கிநாட்டில் நடந்துகொண்டிருந்த சண்டையில் இங்கிலாந்துதேசத்தார் சிறிதும் தலையிட்டுக்கொள்ளாமல் ஒதுங்கி

நின்றிருந்தாலும், ருஷியர் தாங்கள் துராகிருதமாய் ஒன்றுஞ்செய்வதில்லை யென்று வெளிக்குமாத்திரம் நடித்துக்கொண்டு உள்ளுக்குள்ளேயே படையெழுச்சிக்குவேண்டிய முயற்சிகள் செய்துகொண்டுவருவதாகத் தெரிய வந்ததனால், இங்கிலீஷ்காரரும் அதை அடக்குவதற்குவேண்டிய சன்னாஹஞ்செய்ய முயன்றார்கள். பிரான்சுதேசத்தாரையும் ஆஸ்திரியா தேசத்தாரையும் தமக்குச் சகாயமாய்ச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்பது அவர்களுடைய பூர்ணமான கருத்து. ஒருவேளை சண்டைநேரிடுமோ என்னவோ வென்று அதற்காகச் சேனைகளை மேன்மேலும் விருத்திசெய்துகொண்டுவருகிறார்கள். இப்போதே அந்தச் சேனை சுதேசத்தைப் பத்திரமாய்க்காக்கவும் வெளியில் சண்டையுண்டானால் அதற்குச் சரியாய்க் கைகொடுக்கவும் போதுமானதாய் இருக்கிறது. இத்தோடுகூட நான்குலக்ஷம்பேர் ஆயுதப்பயிற்சிசெய்பவர்களும் சம்பளமில்லாமல் வேலைகற்றுக்கொள்பவருமாயிருக்கிறார்கள். பிரபலமாய்க் கைகலந்து யுத்தம்நடக்கும்படியான சமயம்நேர்ந்தால் இந்த நான்குலக்ஷம்பேரும் வந்து எதிர்க்கச் சித்தமாய்க் காத்திருக்கிறார்கள். ஆதலால், இப்போது தமக்குச் சரியான வல்லமையுடைய துரைத்தனம் வேறொன்றுமில்லையென்று பெருமைபாராட்டி 'இங்கிலீஷ்காரர் என்னசெய்யமாட்டுவார்கள்' என்று ருஷியதேசத்துச் சமாசாரபத்திரிகையொன்றில் கேட்டிருக்கிற கேள்விக்குச் சரியான உத்தரவு கொடுக்கப்படுமென்று நம்புகிறோம். வேறொரு சகாயமுமின்றி தாங்கள் தனித்திருந்தாலும் இங்கிலீஷ்காரர், ஐரோப்பாவின் தென்கிழக்குப்பாகத்திலுள்ள தங்கள் சுதந்தரங்களையெல்லாம் நன்றாய்க் காத்துக்கொள்ளத் திறமையுடையவர்களாய் இருக்கிறார்கள். எப்படியெனில், துருக்கியநாட்டோரமெல்லாம் ருஷியருடைய வல்லமையை எதிர்க்கப் போதுமானதாய் லக்ஷம் துருப்புகளும் சண்டைக்கப்பல்களும் சுலபமாய்வந்து அடையத்தக்க பத்திரமான இடம் அவர்களுடைய சுவாதீனத்தில் இருக்கின்றது. இவைகளையெல்லாம் ஆராய்ந்துபார்த்தால் இங்கிலாந்துக்கு எவ்விதமானகுறைவும் உண்டாகுமென்று தோன்றவில்லை. பிரான்சுதேசத்தாரும் ஆஸ்திரியா தேசத்தாரும் இங்கிலீஷ்காரருக்கே துணைசெய்யக் கருதியிருக்கிறார்கள். ருஷியரும் முன்னிருந்த ஆவேசம் அடங்கிச் சாந்தமாயிருக்கிறார்கள்போலும்; ஆகிலும் ராஜதந்திரம் எப்படிமுடியுமோ பார்க்கவேண்டும்.

அந்தகர் வித்தியாப்பியாசம்.—சென்னப்பட்டணம் குளக்கடைவீதி 103-வது கதவிலக்கமுள்ள வீட்டில் இப்போது வைத்திருக்கும் செந்தமிழ்ப் போதகசாலைத் தலைவராகிய அருணாசலபிள்ளை என்பவர், ஆண்பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் அக்ஷராப்பியாசந்தொடங்கித் தமிழ் பாஷையைக் கற்பித்துவருகையில், பிறவிக்குருடருக்கும் தமிழ்ப்பாஷையிலுள்ள அக்ஷரங்களின் ஒலிவரி வடிவங்களைச் சுலபமாக எழுதவும் படிக்கவும் கற்பிப்பது யுக்தமென்று நினைத்து, அதற்குவேண்டிய கருவிகளைச் சேகரித்து வைத்துக்கொண்டிருக்கிறார். அவர் இப்பொழுது அடிப்படை போட்டிருப்பதை இந்தத் தமிழ்நாட்டார் அறிந்து அநுசரித்துவந்தால் அந்தகர்களுக்குப் பெரும்பயனை விளைவிக்குமென்று தோன்றுகின்றது.

Printed at the C. K. S. Press.